NT

SINGAPORE – CAMBRIDGE
General Certificate of Education Normal Technical Level

**அடிப்படைத் தமிழ்** **1204/1**

தாள் 2

# ORAL EXAMINATION

**BASIC TAMIL** **SPECIMEN PAPER**

Paper 2 *With effect from 2024 examination*

**தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்**

1 வாய்மொழித் தேர்வு பின்வரும் இரு பகுதிகளை உள்ளடக்கியது:

- **பகுதி 1 – வாய்விட்டு வாசித்தல்**
  நீ ஒரு பனுவலை வாய்விட்டு வாசிக்க வேண்டும்.

- **பகுதி 2 – ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல்**
  நீ ஓர் ஒளிக்காட்சியைப் பார்க்க வேண்டும். அதன் பின்னர், தேர்வாளர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட வேண்டும்.

2 நீ **‘START’** என்பதை ‘கிளிக்’ செய்ததும், பனுவலை மனத்திற்குள் படித்துக்கொள்வதற்கும் ஒளிக்காட்சியைப் பார்த்துக்கொள்வதற்கும் உனக்கு 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

Singapore Examinations and Assessment Board

©MOE

DAY 1

# 2024 சிங்கப்பூர் - கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ்
# வழக்கநிலைத் தொழில்நுட்பம்
# அடிப்படைத் தமிழ் (1204/2)

---

## பகுதி 1: வாய்விட்டு வாசித்தல்

ஒருமுறை தத்துவஞானியான விவேகானந்தர் இமயமலையின் நீண்ட மலைப்பாதை வழியே சென்றுகொண்டிருந்தார். அப்போது முதியவர் ஒருவர் களைத்துப்போய் உட்கார்ந்திருப்பதை அவர் கண்டார். அம்முதியவர், “இந்தப் பாதையை நான் எப்படிக் கடக்கப் போகிறேன்? இனி என்னால் ஓர் அடிகூட எடுத்து வைக்க இயலாது,” எனப் புலம்பிக்கொண்டிருந்தார்.

அதைக் கேட்ட விவேகானந்தர் முதியவரின் அருகே சென்று, “பெரியவரே! சற்றுத் திரும்பிப் பாருங்கள். அந்த நீண்ட பாதையை நீங்கள்தான் கடந்து வந்தீர்கள். அதனால், முன்னால் இருக்கும் பாதையையும் உங்களால் நிச்சயமாகக் கடக்க முடியும்,” என்று ஊக்கமளிக்கும் வகையில் கூறினார்.

முதியவருக்குப் புதுத்தெம்பு பிறந்தது. களைத்துப்போய் உட்கார்ந்திருந்த அவர் உற்சாகத்துடன் மீண்டும் நடக்கத் தொடங்கினார். தக்க தருணத்தில் ஒருவருக்கு அளிக்கப்படும் ஊக்கம் வலிமைமிக்கது என்பதை இந்தச் சம்பவம் நமக்கு உணர்த்துகிறது.

**DAY 1**

# 2024 சிங்கப்பூர் - கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ்
# வழக்கநிலைத் தொழில்நுட்பம்
# அடிப்படைத் தமிழ் (1204/2)

---

## பகுதி 2: ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல்

**தூண்டுதல் வினாக்கள்:**

1. ஒளிக்காட்சியில் இடம்பெற்றவர்களைப்போல நீயும் மற்றவர்களுக்கு வாழ்த்து அட்டைகள் கொடுத்திருக்கிறாயா? உன் அனுபவத்தைப் பகிர்ந்துகொள்.

2. நீ தாளால் செய்யப்பட்ட வாழ்த்து அட்டையைப் பெற விரும்புகிறாயா அல்லது மின் வாழ்த்து அட்டையைப் பெற விரும்புகிறாயா? ஏன்?

3. வாழ்த்து அட்டைகள் கொடுப்பதைத் தவிர்த்து வேறு எந்த வழிகளில் நாம் பிறர்மீது அக்கறை கொண்டிருக்கிறோம் என்பதை உணர்த்தலாம்?